1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அரசு ஆய்வு செய்துக் கொண்டிருக்கிறது.

திரு. க. இரா. சின்னராசு : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே எந்த எந்த ஒன்றியங்களைப் பிரிக்க வேண்டுமென்று அறிக்கை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வந்திருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஊத்தங்கரை ஒன்றியத்தைப் பற்றித்தான் தகவல் இருக்கிறது.

வாசுதேவ நல்லூருக்குப் பாதுகாக்கப்பட்ட நீர் வழங்கல்.

*வினா எண். 814 திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாசுதேவ நல்லூரில் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் கிடைக்க மேல்நிலை நீர்த்தேக்கம் கட்ட செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டிருக்கிறதா? அது எவ்வளவு ? எப்போது இந்த வேலை தொடங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் ?

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, முழு விவரத்தையும் தந்துவிடுகிறேன. வாசுதேவ நல்லூரில் ஆறு ஆழ் குழாய்கள் கைப்பம்புகளுடன் ஊரக குடிநீர்திட்டத்தின் கீழ் (குறைந்த தேவை திட்டத்தின் கீழ்) நிறுவப்பட்டு மக்களின் உபயோகத்தில் இருந்து வருகின்றன. சங்கரன் கோவில் நகராட்சி புளியங்குடி நகராட்சி மற்றும் பதினொன்று வழியோர கிராமங்களுக்கு பயன்படும் வகையில் கோடைக்கால நீர்த் தேக்கத் தொட்டி கட்டவும் மற்றும் குடிநீர் அபிவிருத்தி செய்யவும் கூட்டு ஆய்வு நடத்தி அதனை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மதிப்பீடு ரூ 20,200 தயாரிக்கப்பட்டு தனது ஒப்புதல் அளித்துள்ளது. அம்மாதிரி வழியோர கிராமங்களில் வாசுதேவ நல்லூரும் ஒன்றாகும். இத்திட்டத்திற்கான விகிதாச்சார ஆய்வுத்

தொகையை சங்கரன்கோயில் நகராட்சி, நகரம் ஊராட்சியைத் தவிர மற்றவை (வாசுதேவநல்லூர் உட்பட) பல நினைவூட்டுக் கடிதங்கள் அனுப்பியும் கட்டவில்லை. அதனால் ஆய்வுப் பணிகள் துவங்கப்படவில்லை, தற்போது பேரூராட்சிகள் ஆய்வுக் தொகையைச் செலுத்தாவிட்டாலும் ஆய்வு வேலைகளைச் செய்யலாம் என குடிநீர்வடிகால் வாரியம் 1979 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24-ம் நாளில் உத்திரவிட்டுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆய்வு வேலையில் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். இந்த ஆய்வுத் திட்டத்தின் அடிப்படையிலே, இந்தக் கிராமங்களும் வாசுதேவ நல்லூரிலே எந்த நிலையிலே வருகிறது ? அரசினுடைய மானியம் ஏதாவது உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, முழு விவரங்களையும் தந்து விட்டேன், மற்றபடி எந்த எந்த கிராமங்கள் என்ற தகவல் என்னிடத்திலே இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே, மலையை அடுத்தாற் போல் உள்ளது வாசுதேவநல்லூர். அங்கே, கீழே 10 மைல், 15 மைல் தள்ளி சரியான தண்ணீர் கொடுக்கும் போது, அதை ஒட்டித்தான் தண்ணீர் போகிறது. அப்படி இருக்கும் போது, அந்தக் கிராமத்திற்குக் கொடுக்கவில்லையென்று மக்கள் கவலைப்படுகிறார்கள். எனவே, தடங்கல் இருந்தாலும், அதைச் சீர்படுத்தி, திட்டம் ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, எங்கே தண்ணீர் இருக்கிறது, அது நல்ல தண்ணீரா, எங்கிருந்து கொண்டு வந்தால் மக்களுக்கு நல்லது என்பதையெல்லாம் நிர்ணயிப்பது அதிலே உள்ள வல்லவர்களே தவிர, விஷயம் தெரியாதவர்கள் அல்ல. அதற்காகத் தனியாகப் பயிற்சி பெற்றவர்களே தவிர, அவர்கள் அனுப்பும் பரிந்துரையை அரசு பரிசீலித்து முடிவெடுக்கிறது.